River Water Dispute

* 57 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the statement made by the Chief Minister of Kerala in January 1968 on the floor of the Kerala Assembly that an agreement has been reached between Kerala and Tamil Nadu in the matter of river water dispute, is correct; and

(*b*) if so, whether the details of the agreement will be placed on the table of the House?

நதி நீர் பிரச்னை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நதி நீர் பிரச்னையில் தமிழ்நாட்டிற்கும் கேரளத்திற்கும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது என கேரள முதல் அமைச்சர் 1968 ஜனவரியில் கேரள அசெம்பிளியில் கூறியுள்ளது சரியா?

(இ) ஆம் எனில், உடன்பாட்டின் விவரங்கள் சபை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) & (இ) கேரள முதல் அமைச்சர் அம்மாதிரியான அறிக்கை விடுத்தாரா என்பது தமிழக அரசுக்குத் தெரியாது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் குறித்து கேரள அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கை வரைவு நிலையில் மட்டுமே இன்றளவும் உள்ளதால், திட்டம் குறித்துள்ள விரிவான விவரங்களை குறிப்பிடுதல் இயலாததாகும்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த நதி நீர் பிரச்னையில் மீண்டும் கேரளத்தோடு உடன்பாடு செய்வதற்கு தற்போதுள்ள அமைச்சரவை முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தற்போதுள்ள அமைச்சரவை ஏற்கனவே முயற்சி எடுத்துக்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் சில நாட்களுக்கு முன்னால்கூட அதை சொல்லியிருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்தில் மறுபடியும் பேச்சுவார்த்தை தொடங்கப்படும்.

Town Panchayats

* 58 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Town Panchayats newly constituted from April 1967 to June 1968 ?

[26th February 1969

நகரப் பஞ்சாயத்துகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1967 எப்ரல் முதல் 1968 ஜூன் வரை புதிதாக எத்தனை நகரப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன?

மாண்புமிகு திரு. எம். முத்துசுவாமி: 92 பேரூராட்சிகள்.

Cauvery Sugar Mills, Tiruchi

* 59 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there was any strike in the Cauvery Sugar Mills at Tiruchy in October 1967;

(b) whether 1,200 tonnes of sugarcane was damaged thereby; and

(c) if so, the action taken thereon by the Government?

காவேரி சர்க்கரை ஆலை, திருச்சி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி காவேரி சர்க்கரை மில்லில் 1967 அக்டோபர் மாதத்தில் வேலை நிறுத்தம் நடந்ததா?

(இ) இதனால் 1,200 டன் கரும்பு கெட்டுவிட்டதா?

(உ) ஆம் எனில், அதன் மேல் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம்: (அ) ஆம்.

(இ) அரசிடம் விவரங்கள் இல்லை.

(உ) மாவட்ட ஆட்சித் தலைவரின் தலையீட்டினாலும், தற்காலிக வேலை நீக்க ஆணை திரும்பப் பெறப்பட்டதாலும், 1967-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் அடிக்கடி நடைபெறும் வேலை நிறுத்தத்தினால் கரும்பு கெட்டுப்போகிறது என்று ஆலை அதிபர்களாலும், கூட்டுறவு ஆலை அதிகாரிகளாலும் கூறப்படுகிறது. கரும்பு வெட்டி ஸ்டாக் வைத்திருக்கும்போது ஸ்ட்ரைக் செய்வது சட்ட விரோதமானது என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம்: இது திடீரென்று ஏற்பட்ட ஒன்றாகும். அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக்கேற்ப அரசாங்கம் கவனித்து ஆவன செய்யும். இது அப்படிப்பட்டதல்ல.